குடியிலே காங்கிரஸ் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அன்றைய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கலந்து கொண்டு பேசிய நேரத்தில் அந்த வேம்பார் நிகழ்ச்சியைக் கண்டிப்பதை விட்டுவிட்டு அந்த நிகழ்ச்சியை அப்படித்தான் செய்வார்கள் என்ற முறையிலே, அதற்கு உற்சாகமூட்டத்தக்க அளவுக்கு பேசினார்கள். இதன்காரணமாக காங்கிரஸ்காரர்கள் மனதிலே என்ன எண்ணி இருக்கிறார்கள் என்றால் அவர்கள் இந்த நாட்டிலே குழப்பம் ஏற்படவேண்டும், அந்தக் குழப்பத்தின் காரணமாக இந்த ஆட்சி மீது களங்கத்தைச் சுமத்த வேண்டுமென்றுதான். அதன் காரணமாகத்தான் இவ்வாறெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்த வாதத்தை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, இந்த ஆளுநர் பேருரையிலே மொழிப்பிரச்சினையைப் பற்றி மிகத்தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலேயுள்ள மாணவர்கள் நல்லமுறையிலே நமது கொள்கையை ஒத்துக்கொண்டார்கள். இந்த மொழித் தீர்மானமானது உண்மையிலேயே நம் வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு மாபெரும் ஏற்பாடாகச் செய்யப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்): இத்துடன் இன்றைய பேரவை நடவடிக்கைகள் முடிவுறுகின்றன. மீண்டும் நாளை மறுநாள் காலை 9 மணியளவில் பேரவை கூடும்.

பிற் பகல் 1-58 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

5. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

'NIL'.

B. Reports, Notifications and Other Papers.

† 8. Demands for Grants for Further Expenditure and Detaild Supplementary Estimates thereof for the year 1967–68 (English and Tamil).

† 9. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1967-68 (English and Tamil).

† 10. Speech of Hon. the Chief Minister presenting the First Supplementary Estimates for the year 1967-68 (English and Tamil).

† Placed on the Table of the House on 16th February 1968.